பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 12 சனிக்கிழமை 28.08.2021 கதிர் 160

## சாவகச்சேரியில் இன்று 14 பேருக்கு கொரோனா

யாழ்., தென்மராட்சி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று மேற்கொள் எப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 14 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இன்று 94 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

☞ 2

# வடக்கில் பல பிரதேசங்களிலும் சமூகத் தொற்றானது கொரோனா

### சமூக மருத்துவ பேராசிரியர் கருத்து

கொழும்பு, ஓகஸ்ட் 28

கொவிட் 19 பரவுகை மேல் மாகாணத்திலும் மற்றும் வடக்கு மாகாணம், காலி, மாத்தறை மாவட்டங்களில் பல பகுதிகளிலும் சமூகத் தொற்றாகப் பரவிவிட்டது.

- கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவத் துறையின் தலைவர் பேராசிரியர் மனுஜ் சி. வீரசிங்க இப்படித் தெரிவித்திருக்கின்றார்.

கொரோனா வைரஸின் திரிவான டெல்டா வைரஸ் தனது கோரத் தாண்டவத்தின் ஆரம்ப கட்டத்தைத்தான் இப்போது காட்டியுள்ளது. இது உச்ச கட்டத்தை எட்டும்போது அது தாங்க முடியாத பேரழிவைத் தரும்.

கொரோனாத் தொற்றுப் பாதிப்புப் பற்றிய புள்ளி விவரங்களை நம்பி அவற்றில் தங்கி இருக்காதீர்கள். உண்மை நிலைமை மோசமானது.

☞ 2

## கோரப்பிடியில் இலங்கை; ‘சுப்பர் டெல்டா’ பேராபத்து!

### பேராசிரியர் சந்திம ஜீவந்தர அதிர்ச்சித் தகவல்



இலங்கையில் ‘சுப்பர் டெல்டா’ திரிவு உருவாகலாம் என்ற சந்தேகம் இருப்பதால் அது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு மற்றும் மரபணு ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

☞ 2

## ஒட்சிசனின் உதவியுடன் 936 பேருக்குச் சிகிச்சை



ஒட்சிசனின் உதவியுடன் 936 கொரோனாத் தொற்றாளர்கள் நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று கொரோனாப் பரவலைத் தடுப்பதற்கான ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நீண்ட நாள்பட்ட நோய்களான நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், பக்கவாதம், சிறுநீரக நோய்களால் பாதிக்கப்பட்ட 4 ஆயிரத்து 347 பேர் கொரோனா வைரஸ்

☞ 2

### தனிமைப்படுத்தல் சட்டவிதிகள் மீறல்;

## 60 ஆயிரத்தைத் தாண்டியது கைதானோர் எண்ணிக்கை

தனிமைப்படுத்தப்பட்ட சட்டவிதிகளை மீறியமை தொடர்பில் இதுவரை கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 60ஆயிரத்தைக் கடந்துள்ளது.

நாட்டில்தனிமைப்படுத்தல்சட்டவிதிகளைமீறியமைதொடர் பில் இன்றுகாலை6மணியுடன்முடிவடைந்த24

☞ 2

## தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலினுக்கு சுரேன் ராகவன் எம்.பி. நன்றி தெரிவிப்பு



தமிழ்நாட்டில்வாழும்இலங்கைத் தமிழர்களுக்குப் பல்வேறுதிட்டங்களையும்சலுகைகளையும்அறிவித்துள்ளதமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வடக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சுரேன் ராகவன் நன்றி தெரிவித்துள்ளார்.

110 விதியின் கீழ் இந்த அறிவிப்பைத் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிவித்ததை வரவேற்றுள்ள கலாநிதி சுரேன் ராகவன்,

☞ 2

## வவுனியாவில் மேலும் 7 பேரை சாகடித்த கொடிய கொரோனா

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கொரோனா பெருந்தொற்றுக்குள்ளான மேலும் 7 பேர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, கற்குளம் படிவம் மூன்று பகுதியில் மயங்கி விழுந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில்

☞ 2


## இரண்டு மாடி வீட்டில் தீ; கணவன், மனைவி சாவு

கடவத்தை, எல்தெனிய பிரதேசத்திலுள்ள வீடொன்றில், இன்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக வீட்டில் வசித்து வந்த கணவனும் (வயது 57), மனைவியும் (வயது 53) தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை

தீவிபத்துதொடர்பில்களனிய குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் மற்றும் கடவத்தை பொலிஸ் நிலையத்தின் அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ். பல்கலை இரு இணைப் பேராசிரியர்கள் உட்பட 4 பேர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இரண்டு இணைப் பேராசிரியர்கள் உட்பட நான்கு பேரைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தாவரவியல்துறைத்தலைவரும்இணைப் பேராசிரியருமான இ.கபிலன் தாவரவியலில் பேராசிரியராகவும், இரசாயனவியல் துறையின் முன்னாள் தலைவரும்

☞ 2

## கடலில் மிதந்த சடலம் மீட்பு!



கிளிநொச்சி மாவட்டம், பூநகரி, சங்குப்பிட்டி கடற்பரப்பில் காணப்பட்ட சடலம் கிளிநொச்சி பதில் நீதிவான் முன்னிலையில் இன்று காலை மீட்கப்பட்டது.

☞ 2

## கோரப்பிடியில் இலங்கை; .................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தியாவின் டெல்டா பிளஸை விடவும் 'சுப்பர் டெல்டா' வீரியம் கொண்டதா என்பது தொடர்பில் எமக்கு இதுவரை தெரியாது. எதிர்காலத்தில் பரவுமா என்பது தொடர்பில் ஆய்வு நடத்த கால அவகாசம் வேண்டும். இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு முழுவதும் நூற்றுக்கு நூறு வீதம் கொரோனா வைரஸின் திரிவான 'டெல்டா' தொற்றே பரவி வருகின்றது. கொழும்பு பேராபத்து மிக்க வலயமாக மாறியுள்ளது.

நாட்டில் தடுப்பூசித் திட்டம் சாதகமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதால் செப்டெம்பர் மாதம் இறுதியளவில் நாட்டுக்கு நன்மையளிக்கக்கூடிய வகையிலான சூழல் உருவாகும் என ஊகிக்கின்றோம் - என்றார்.

## ஒட்சிசனின் உதவியுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்த அநேகமான தொற்றாளர்கள் நீண்ட நாள்பட்ட நோய் நிலைமைகளால் பாதிக்கப்பட்டவர்கள் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## வடக்கில் பல பிரதே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெறும் பொது முடக்கம், ஊரடங்கினால் பயன் இல்லை. தொற்றுப் பரவலைத் தவிர்க்கச் செய்யும் விஞ்ஞான ரீதியான நடவடிக்கைகளையே எடுக்க வேண்டும்.

முடக்கத்தை அறிவித்துவிட்டு, பின்னர் அதனை நீக்குவதாக வெறுமனே பிரகடனப்படுத்தினால் மக்கள் மீண்டும் திரளுவர். அடங்கிக் கிடந்த தொற்றுப் பரவல் மீண்டும் எகிறிப் பாய அது வழி செய்ததாக இருக்கும். எனவே மருத்துவ - சுகாதார நிபுணர்களின் விஞ்ஞான ரீதியான பார்வையிலே விடயங்களை அணுகி, முடிவுகளை எடுத்து, நடைமுறைப்படுத்த வேண்டும். - என்றும் அவர் கூறினார். (மேலதிக விவரங்கள் ஆசிரியர் தலையங்கத்தில்)

## சாவகச்சேரியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்போது தென்மராட்சி பிரதேசத்தில் பணியாற்றும் கிராம அலுவலர், கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை ஊழியர், கோண்டாவில் அரச பஸ் போக்குவரத்துச் சபையில் பணியாற்றும் ஊழியர் உட்பட 14 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## தமிழ்நாடு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த மனிதாபிமானம் மிக்க செயற்பாட்டுக்காக முதலமைச்சரைப் பாராட்டியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநராக கலாநிதி சுரேன் ராகவன் பணியாற்றிய வேளையில் 2019ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் திகதி யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து முதலாவது உத்தியோக பூர்வ விமான சேவையை ஆரம்பித்து தமிழ் நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த கலாநிதி ராகவன், அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தற்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்திருந்தார். இதன்போது தமிழகத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் நலன்கள் குறித்து கலந்துரையாடியிருந்ததுடன், இலங்கைத் தமிழர்களுடைய நலன்களுக்கென விசேட பிரிவொன்றை உருவாக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன் முதலமைச்சராகப் பதவியேற்றபோதும் மு.க.ஸ்டாலினை வாழ்த்தி அனுப்பி வைத்த கடிதத்திலும் தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் விசேட பிரிவொன்றை அமைக்கவும் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். பல்கலை இரு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இணைப் பேராசிரியருமான திருமதி மீனா செந்தில்நந்தனன் இரசாயனவியலில் பேராசிரியராகவும், தொழிநுட்ப பீடத்தின் பீடாதிபதியும், விவசாய பீடத்தின் முன்னாள் பீடாதிபதியுமான கலாநிதி சிவமதி சிவச்சந்திரன் பயிரியலில் பேராசிரியராகவும், பௌதிகவியல் துறையின் முன்னாள் தலைவர் கலாநிதி க.விக்னரூபன் பௌதிகவியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்படுவதற்கே பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் இன்று சனிக்கிழமை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில், மதிப்பீட்டுக்குழுவின் சிபார்சின் அடிப்படையில் பேராசிரியர்கள் நியமனத்துக்கான தேவைப்பாடுகளை நிறைவு செய்தவர்களின் விண்ணப்பங்கள் மற்றும் மதிப்பீட்டுக்குழுவின் அறிக்கைகள் என்பன சமர்ப்பிக்கப்பட்டன. மதிப்பீடுகளின் படியும், தெரிவுக் குழுவின் சிபார்சின் அடிப்படையிலும் நான்கு பேரையும் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## 60 ஆயிரத்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மணித்தியாலத்தில் 667 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், 63 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தனிமைப்படுத்தப்பட்ட சட்டவிதிகளை மீறியமை தொடர்பில் கடந்த ஒக்டோபர் முதல்இதுவரை 60 ஆயிரத்து 288 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்தின் எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள 13 வீதிச் சோதனை சாவடிகளில் மேல் மாகாணத்துக்குள் நேற்று பிரவேசித்த 641 வாகனங்கள் மற்றும் 1,128 நபர்கள் சோதனையிடப்பட்டன.

அத்துடன் மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறிய 500 வாகனங்கள் சோதனை செய்யப்பட்டன.

அதேவேளை, அங்கிருந்து வெளியேறிய 901 பேரும் பொலிஸாரால் சோதனையிடப்பட்டன என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

## வவுனியாவில்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சேர்க்கப்பட்டபோது மரணமடைந்திருந்த 45 வயது நபருக்கு பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன், சுகயீனம் காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது மரணமடைந்திருந்த கோவில்குளம் பகுதியைச் சேர்ந்த 71 வயது பெண் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்று வந்த உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த 71 வயது பெண் ஒருவரும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். மேலும், கரப்பங்காடு பகுதியைச் சேர்ந்த 53 வயது ஆண் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்திருந்தார்.

தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த 62 வயது ஆண், கனகராயன்குளம் பகுதியைச் சேர்ந்த 60 வயது ஆண், வைரவபுளியங்குளம் பகுதியைச் சேர்ந்த 76 வயது ஆண் ஆகியோரும் வீட்டில் மரணமடைந்திருந்த நிலையில் அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்ததது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அவர்களது உடலை தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

## கடலில் மிதந்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் நேற்று கைகள், கால்கள் நைலோன் கயிற்றால் கட்டப்பட்டு வலையால் சுற்றப்பட்ட நிலையில் சடலம் ஒன்று காணப்பட்டது. குறித்த சடலம் அடையாளம் காண முடியாதளவுக்கு உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது.

இந்நிலையில், இன்று முற்பகல் 11.30 மணியளவில் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தின் பதில் நீதிவான் சதீஸ்குமார் விஜயராணி முன்னிலையில் பூநகரி பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இது முடிவல்ல: ஆரம்பம்!

நாட்டைத்தாக்கியிருக்கும் கொரோனாப் பேரிடர் தொடர்பில் நாட்டின் மூத்த, விடயம் அறிந்த நிபுணர்களின் கருத்தியலை பெற்று அவற்றை இப்பத்தியில் தொடர்ந்து சுட்டிக்காட்டி உரைத்து வருகின்றோம். ஆனால் சமூகம் அந்தக் கருத்துக்களை உள்வாங்கி முன்னெச்சரிக்கையாக நடக்கின்றதா என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது. இந்த சமூகப் பொறுப்பின்மை கடைசியாக நமது நாட்டுக்கே – இலங்கைத் தீவுக்கே – பேரழிவாய் வரப்போவது நிச்சயம். அதை உணராமலேயே சமூகத்தின் அடிப்படை அங்கங்களான தனிநபர்களுடன் குடும்பங்களும் பொறுப்பின்றி செயற்படுகின்றமைதான் பெரும் துன்பியல் கட்டமாகும்.

கொவிட் பரவுகை மேல் மாகாணத்திலும் மற்றும் வட மாகாணம், காலி, மாத்தறை மாவட்டங்கள் ஆகியவற்றின் சில பகுதிகளில் சமூகத் தொற்றாக மாறிவிட்டது என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டிருக்கின்றார் கொழும்பு பல்கலைக்கழக சமூக மருத்துவ பீடத்தின் தலைவர் பேராசிரியர் மனுஜ் சி.வீரசிங்கே.

கொரோனா வைரஸின் திரிவான டெல்டா வைரஸ் நாட்டில் தன்கைவரிசையை இப்போது காட்டத்தொடங்கிவிட்டது. இது ஆரம்பம் மட்டும்தான். இனித்தான் மிக மிக மோசமான நெருக்கடிகள் கட்டவிழ்ப் போகின்றன என்றார் அவர்.

"இப்போதுதான் ஆரம்பத்தை பார்க்கிறோம். டெல்டா நெருக்கடியின் இறுதியை நாம் இனித்தான் காண வேண்டியதாக இருக்கும். அது பயங்கரமாக அமையும்" – என்கிறார் அவர்.

கொரோனாத் தொற்றுப் பற்றிய உத்தியோகபூர்வ புள்ளி விவரங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. அந்த எண்ணிக்கையில் தங்கியிருப்பது குழப்பத்தை ஏற்படுத்தும். ஒரு வீட்டில் ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டாலேயே நிச்சயமாக அது வீட்டில் உள்ள அனைவருக்குமே தொற்றியிருக்கும். அவர்கள் எல்லோரையும் தொற்றுத் தொடர்பில் சோதனை செய்வது என்பது சாத்தியமற்றது என்று குறிப்பிடுகின்றார் பேராசிரியர் மனுஜ் சி.வீரசிங்க.

குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு மத்தியில் பதின்ம வயது இளைஞர், யுவதிகளும் வசிக்கின்றனர். இந்த இரு தரப்பினருக்கும் – இந்த இரு வயதுப் பிரிவினருக்கும் – இது தொடர்பான சிகிச்சை முறைகள் வேறானவை என்பதையும் அவர் சுட்டுகின்றார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், பிற அரசியல் தலைவர்களும், சமூக ஆர்வலர்களும், சுகாதார – மருத்துவ நிபுணர்களும் சுட்டிக்காட்டுகின்றமை போல இப்போது நடைமுறையில் இருப்பதற்குப் பெயர்தான் பொது முடக்கம், ஊரடங்கு. ஆனால் மக்கள் வீதிகளில் தாராளமாக உலவுகின்றனர். மக்களின் நேரடி ஊடாட்டமும், சமூக தொடர்பாடல்களும் கட்டுப்பாடின்றி தொடர்கின்றன. ஆகவே, பொதுமுடக்கம், ஊரடங்கு போன்றவற்றை அவற்றின் நோக்கங்கள் விஞ்ஞான ரீதியில் பயனளிக்கத் தக்க வகையில் நடைமுறைப்படுத்த வேண்டுமே தவிர, இப்போது போல பெயருக்காக அல்ல என்று சமூக ஆர்வலர்கள் சுட்டுகின்றனர்.

இப்போதைய பெருமுடக்கம் நீக்கப்பட்டதும் என்ன நடக்கும்? மக்கள் மீண்டும் கட்டுப்பாடின்றி ஒன்று கூடுவர். அடங்கியிருந்த டெல்டா வைரஸ் மீண்டும் கிளர்ந்தெழுந்து பரவி தனது வீரத்தை காட்டும். அது தகிப்பதாக – சகிக்க முடியாததாக – முகங்கொடுக்க இயலாததாக – பேரழிவைத் தரும் என பேராசிரியர் மனுஜ் சி.வீரசிங்க நேரத்துடனேயே எச்சரிக்கின்றார்.

சரியோ, பிழையோ இந்தப் பொது முடக்கம் சுகாதார – மருத்துவ அதிகாரிகளுக்கு தமது அடுத்த கட்டம் குறித்து ஆற அமர இருந்து சிந்தித்து ஆலோசித்துத் தீர்மானம் எடுப்பதற்கான – மூச்சு விடுவதற்கான – கால அவகாசத்தை தந்திருக்கின்றது.

இந்த முடக்கத்தின் முடிவில் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு – நடைமுறைச் சாத்தியமான வழிகளில் தடுப்பதற்கு – நாம் என்ன செய்யப் போகின்றோம், எப்படி செயற்படப் போகிறோம் என்பதை முடிவு செய்வதற்கான முக்கிய காலகட்டம் இது.

இந்த இறுதிக்கட்டத்தில் நாம் சரியாக செயல்படத் தவறினால் விளைவு மிக விபரீதமாக இருக்கும். கொரோனாத் திரிவான டெல்டா வைரஸின் தாக்கத்தின் ஆரம்ப கட்டத்தில்தான் நாம் இருக்கிறோம்; இறுதிக் கட்டத்தில் அல்ல என்பதை மறந்து விடாதீர்கள் என்ற பேராசிரியர் மனுஜ் சி.வீரசிங்க எச்சரிப்பதை மனதில் இருத்துவது முக்கியமாகும்.

# கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகள் ஒரு பன்முகப் பார்வை ஆய்வரங்கு!

## நாளை சூம் செயலி ஊடாக

திருமறைக் கலாமன்றம் என்னும் கலை நிறுவனத்தை ஸ்தாபித்து அதற்கூடாக கலை, இலக்கிய, சமூக, ஆன்மீகத் துறைகளில் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக பாரிய பங்களிப்புக்களை வழங்கி கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அமரத்துவமடைந்த அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளையும் ஆவணப்படுத்தும் முகமாக 'கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை' என்னும் தலைப்பில் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் மெய்நிகர் வழியில் சூம் செயலிக்கூடாக திருமறைக் கலாமன்றம் நடத்தி வருகின்ற ஆய்வரங்கத் தொடரின் மூன்றாவது நிகழ்வு நாளை 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு (இலங்கை நேரம்) இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறை தலைவர் அருட்கலாநிதி ஜே.சி.போல் றொகான் அடிகள் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் 'அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளின் கலைப்பணியின் குவிவுமையமாக சிறுவர் இளையோர் உருவாக்கப் பணி' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி சுகன்யா அரவிந்தன் ஆய்வை வழங்கவுள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 7893644809, கடவுச்சொல் சி.பி.ஏ. என்பதற்கூடாக இந் நிகழ்வில் இணைந்து கொள்ள முடியும். தொடர்ந்தும் மாதந்தோறும் இவ் ஆய்வரங்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளி, முல்லையில் வெடிபொருள்கள் அகற்றல்

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 1,710,146 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து 29 ஆயிரத்து 403 அபாயகரமான வெடிபொருள்களை அகற்றி உள்ளதாக தனியார் நிறுவனம் ஒன்றின் முகாமையாளரும் ஓய்வுபெற்ற கப்டனும் ஆன பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

அவர் இன்று (சனிக்கிழமை) அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்ட விடயங்களை தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில்-

இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடி அகற்றும் அரசசார்பற்ற நிறுவனம் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2021 ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் 1,710,146 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து 29 ஆயிரத்து 403 அபாயகரமான வெடிபொருள்களை அகற்றி உள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடி அகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் காணி அமைச்சருக்கு நேற்று அவசரக் கடிதம்

இலுப்பைக்கடவை காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணி தொடர்பாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் நேற்று (வெள்ளிக்கிழமை) காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவிற்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் -

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை சோழ மண்டல குளம் பகுதியில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணி 250 ஏக்கர் உள்ளது. இந்தக் காணியில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக இலுப்பைக்கடவை அந்தோனியார்புரம் பகுதியில் உள்ள 95 பேர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு முறையாகக் காணி கச்சேரியும் நடைபெற்றுள்ளது. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அதிகாரிகள் பங்கேற்புடன் பல கலந்துரையாடல்களும் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றுள்ளன.

ஆகவே பிரதேச செயலாளரால் பலமுறை எழுத்து மூலம் பெயர் பட்டியல் இரண்டு ஏக்கர் வீதம் வழங்குமாறு காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் இணக்கமும் காணப்பட்டுள்ளதாக அறிகிறோம். ஆனால் இதுவரை எந்த விதமான ஆக்கபூர்வமான பதிலும் வழங்கவில்லை.

மாறாக தற்போது அரசியல் செல்வாக்குடன் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த தனிநபர்களுக்குக் காணி சீர்திருத்த ஆணைக்குழு நூறு ஏக்கருக்கு மேல் வழங்கியுள்ளதாகவும் அவர்கள் தற்போது காணி துப்புரவாக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். இந்த அனுமதி கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் வழங்கப்பட்டதாக அறிகிறோம்.

எனவே தனி நபர்களின் காணி துப்புரவாக்கும் பணியைத் தற்காலிகமாக நிறுத்திக் கடந்த 25 ஆண்டுகளாகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு ஏலவே பிரதேச செயலகத்தின் கோரிக்கைக்கு அமைய உள்ள பயனாளிகளுக்கு உடனடியாக இரண்டு ஏக்கர் வீதம் காணி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். பின்னர் ஏனையவர்களுக்கு வழங்குங்கள். ஏழை விவசாயிகளைப் பல ஆண்டுகளாக ஏமாற்றுவது காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மிக மோசமான செயற்பாடு ஆகும். ஆகவே தயவு செய்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பதுளை மாவட்டப் பொது வைத்தியசாலையில் வைத்தியர்கள் உட்பட 120 பேருக்குத் தொற்று

பதுளை பொது வைத்தியசாலையில் வைத்தியர்கள் உள்ளடங்கலாக நிர்வாகப் பிரிவில் 120 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சைப் பிரிவுக்குப் பொறுப்பான வைத்தியர் பாலித ராஜபக்ஷ ஊடகங்களிடம் தெரிவித்தார்.

பதுளை பொது வைத்தியசாலையின் விசேட வைத்தியர்கள் மூவர் உள்ளிட்ட 11 வைத்தியர்கள், தாதியர்கள் 13 பேர், குடும்ப சுகாதார சேவை அதிகாரிகள் 08 பேர், ஏனைய அதிகாரிகள் 11 பேர், சிற்றூழியர்களில் சாரதி, பாதுகாவலர்கள் உள்ளிட்டவர்களுக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அதேபோன்று வைத்தியசாலையில் ஐந்து கொரோனா சிகிச்சை விடுதிப் பிரிவுகளில் 150 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தொற்றாளர்களில் 40 இற்கும் மேற்பட்டவர்களுக்கு ஒட்சிசனின் உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

# அமெரிக்கா அதிரடித் தாக்குதல்

# தாக்குதல்தாரிகளின் நிலைகள் நாசம்!



ஆப்கானின் தலைநகர் காபூலிலுள்ள விமான நிலையத்துக்கு அருகே குண்டுத் தாக்குதலை நடந்தியதன் பின்னணியில் உள்ள தீவிரவாதிகளின் நிலைகள் மீது, அமெரிக்கா தாக்குதல் நடத்தியுள்ளது. இன்று (சனிக்கிழமை) அமெரிக்க இராணுவம் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில், காபூல் குண்டுவெடிப்பு தாக்குதலுக்கு திட்டம் வகுத்த தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவம் கூறியுள்ளது.

இந்த தாக்குதல் குறித்து மத்திய கமாண்டின் கேப்டன் பில் அர்பன் கூறுகையில், 'ஆப்கானிஸ்தானின் நான்கர்ஹர் மாகாணத்தில் தாக்குதல் நடத்தினோம். நாங்கள் குறிவைத்த இலக்கில் இருந்தவர்கள் கொல்லப்பட்டனர். இலக்கை முடித்துவிட்டோம்.

இந்தத் தாக்குதலில் அப்பாவி பொது மக்களுக்குஎந்தப்பாதிப்பும்ஏற்படவில்லை' என கூறினார். வெள்ளை மாளிகை மற்றும்பெண்டகனில்இருந்துதொடர்ச்சியான கடுமையான எச்சரிக்கைகளுக்கு மத்தியில் அமெரிக்க இராணுவத்தின் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. 13 அமெரிக்கப் படையினர் உயிரிழப்புக்குக் காரணமான பயங்கரவாதிகளை நாங்கள் மறக்கவும் மாட்டோம்; மன்னிக்கவும் மாட்டோம் என அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்ததற்கு ஒரு நாளுக்கு பிறகு இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. முன்னதாக ஐ.எஸ்.ஐ.எஸ்–கே (கொரான்) தீவிரவாதிகளைத் தாக்க தகுந்த திட்டம் வகுக்குமாறு ஜனாதிபதி ஜோ பைடன் பென்டகனுக்கு பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருந்தார் என அமெரிக்க மத்திய கமாண்ட் படையின் தலைவர் ஜெனரல் ஃபிரான்க் மெக்கென்ஸி கூறியிருந்தார். அமெரிக்க துருப்புக்களை மீள பெறுவதற்கான காலக்கெடுவுக்கு முன்னதாக அமெரிக்கப் படைகளை குறிவைத்து மேலும்தீவிரவாதத்தாக்குதல்கள்நடத்தப்படலாம் என எச்சரிக்கப்பட்டுள் ளது. இதனால், 'வெளியேற்றத்தின் அடுத்த சில நாள்கள் எங்களுக்கு மிக ஆபத்தான காலம்' என்று வெள்ளை மாளிகை செய்திச் செயலாளர் ஜென் சாகி கூறினார். இதனிடையே விமான நிலைய நான்கு வாயில்களிலும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க வீரர்களுக்கு பாதுகாப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

# காபூல் தாக்குதலில் 170 பேர் உயிரிழப்பு




காபூல் விமான நிலையத்தில் பயங்கரவாதிகளால், நடத்தப்பட்ட கொடூர தற்கொலைப் படை தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 170ஆக அதிகரித்துள்ளது. மேலும், குழந்தைகள் உள்பட பலர் காயமடைந்து கவலைக்கிடமாக உள்ளமையால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் தாக்குத லில் உயிரிழந்தவர்களில் 10 அமெரிக்க கடற்படையினர், இரண்டு இராணுவ வீரர்கள் மற்றும் ஒரு கடற்படை மருத்துவர் அடங்குகின்றனர் என அமெரிக்கா தரப்பு தெரிவித்துள்ளது. எனினும் தங்களது தரப்பில் எவ்வித உயிரிழப்பும் ஏற்படவில்லை என தலிபான்கள் அமைப்பு தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) அபே நுழைவாயில் வெளியே அமெரிக்க துருப்புக்கள் பெரும் கூட்டம் நுழைவதைச் சரிபார்த்துக்கொண்டிருந்த போது இந்த இரட்டை குண்டுவெடிப்பு தாக்குதல் நடத்தப்பட்டது. ஐ.எஸ்–கே என்றழைக்கப்படும் இஸ்லாமிய அரசு கொரோசன் என்கிற அமைப்பு இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது. ஆனாலும், ஐ.எஸ். குழுவினர் தாக்குதல் நடத்தலாம் என்கிற அச்சுறுத்தல்களுக்கும் இடையிலும், இறுதி நொடி வரை காபூல் விமான நிலையத்தில் இருந்து மக் களை வெளியேற்றுவோம் என அமெரிக்கா கூறியுள்ளது. இரு வாரங்களுக்கு முன் தொடங்கிய மக்களை வெளியேற்றும் பணியில் இதுவரை 1,11,000 பேர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என வெள்ளை மாளிகை கூறியுள்ளது




# பிரதமரின் நிகழ்ச்சியை கைவிட்டது கனடா!

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஒன்ராறியோவின் போல்டனில் ஆதரவாளர்களுக்கு உரையாற்ற இருந்தார். பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்த நிகழ்வு நிறுத்தப்பட்டது. ட்ரூடோ பேசுவதற்கு முன்பாக, டசன் கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணியில் கூடி அநாகரிகமாக கூச்சலிட்டனர். நேற்று (வெள்ளிக்கிழமை) பேரணியில், இரண்டு மணிநேர தாமதத்தைத் தொடர்ந்து நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது. பின்னர் அவரது பிரச்சாரப் பேருந்தை பொலிஸார் பாதுகாப்பாக வெளியேற்றினர். அமைப்பாளர்கள், மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாததால் நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். கோபமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்களினால், கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின், ஒரு தேர்தல் பேரணியைரத்து செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

சமீபத்திய நாள்களில் கொவிட்–19 தடுப்பூசிகள் மற்றும் அரசாங்க கட்டுப்பாடுகளுக்கு எதிரான போராட்டங்களால் பிரதமரின் பிரசார முயற்சிகள் முடங்கியுள்ளன.

தொற்றுநோய் அனைவருக்கும் எப்படி கடினமாக இருந்தது என்பதை ஆர்ப்பாட்டங்கள் காட்டுகின்றன என அங்கிருந்த ஒருவர் கூறினார். முன்னதாக வெள்ளிக்கிழமை, நோபல்டன் நகரத்தில் உள்ள ஒரு வெதுப்பகத்துக்கான பிரதமரின் வருகைக்கு மக்கள் இடையூறு விளைவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வர்த்தகர்கள் – பொலிஸார் மோதல் பெருவில் 50க்கு மேற்பட்டோர் காயம்

பெருவியன் சந்தையில் நீதிமன்ற உத்தரவை மீறி நடை பாதைகளில் வியாபாரிகள் விற்பனையில் ஈடுபட்டனர் எனக் கூறப்படுகிறது.

இதனால் பொலிஸார் கடைகளை அப்புறப்படுத்த முயன்றனர். அப்போது இரு தரப்பினரிடையே மோதல் வெடித்தது. ஆத்திரமடைந்த நடைபாதை வியாபாரிகள் பொலிஸார் மீது கற்களை வீசி தாக்குதலில் ஈடுபட்டனர். பொலிஸார் கூட்டத்தை கலைக்க தடியடி நடத்தினர். இதனால் அங்கு அசாதாரண சூழல் நிலவியது.

இந்த மோதலில் 47 பொலிஸார் மற்றும் 12க்கும் அதிகமான வியாபாரிகள் காயமடைந்தனர்.








# இலங்கைத் தமிழர்களுக்கான முகாம்கள் இனி மறுவாழ்வு முகாம்களாகும்

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கான முகாம்கள் இனி மறுவாழ்வு முகாம்கள் என அழைக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

நேற்று, தமிழகத்தில் ஏதிலிகளாக உள்ள இலங்கைத் தமிழர் நலனுக்காக 317 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என சட்டப் பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். இந்த நிலையில் தற்போது, தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கான முகாம்கள் இனி மறுவாழ்வு முகாம்கள் என அழைக்கப்படும் என முதலமைச்சர் அறிவித்துள்ளார். இது தொடர்பாக இன்று சட்டப்பேரவையில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின், "இலங்கைத் தமிழருக்கு நாம் எப்போதும் உறுதுணையாக இருப்போம். இனி இலங்கைத் தமிழர்களுக்கான அகதி முகாம்கள் என அழைக்காமல் மறுவாழ்வு முகாம்கள் என அழைப்போம்; அவர்கள் அகதிகள் இல்லை, அவர்களுக்கு நாமிருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

# 'முகாம்களே இல்லாத் தமிழ்நாட்டினை' உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சீமான் கோரிக்கை



சிறப்பு முகாம்களில் வசிக்கும் ஈழச் சொந்தங்களை முகாம்களுக்கு வெளியே குடியமர்த்தி, 'முகாம்களே இல்லாத் தமிழ்நாட்டினை' உருவாக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இது தொடர்பாக சீமான் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், தமிழகமெங்கும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களின் பழுதடைந்த வீடு, உட்கட்டமைப்பு, கல்வி, திறன், மேம்பாடு போன்றவற்றிற்காக 317.45 கோடிரூபா நிதி ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ள தமிழ்நாட்டு முதல்வருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே வேளையில், சிறப்பு முகாம்களில் வசிக்கும் ஈழச்சொந்தங்களை முகாம்களுக்கு வெளியே குடியமர்த்தி, அவர்களது நலவாழ்வினையும் உறுதிசெய்து, நாம் தமிழர் கட்சியின் நீண்டகாலக் கோரிக்கையான 'முகாம்களே இல்லாத் தமிழ்நாட்டினை' உருவாக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென தமிழ்நாட்டு அரசை வலியுறுத்துகிறேன் என தெரிவித்திருக்கிறார்

# நிர்வாகத் தவறால் கொரோனா அதிகரிப்பு குற்றச்சாட்டை மறுக்கும் பினராயி விஜயன்



கேரளாவில் கடந்த புதன் கிழமை தினசரி கொரோனா பாதிப்பு 31 ஆயிரத்து 445 ஆக பதிவாகியிருந்தது. வியாழனன்று 30 ஆயிரத்து 7 ஆக பதிவானது. கடந்த 24 மணி நேரத்தில் மேலும் அதிகரித்து 32,802 ஆக அதிகரித்துள்ளது. நாட்டின் ஒட்டு மொத்த தினசரி பாதிப்பில் 58 சதவீதம் கேரளாவில் பதிவாகிறது என்று இந்திய மத்திய சுகாதாரத்துறைச் செயலர் தெரிவித்துள்ளார்.

கொரோனாச் சூழலைக் கேரளா அரசு சரியாக நிர்வகிக்காததே தொற்று உயரக் காரணம் என மாநில அரசு மீது விமர்சனங்கள் குவிந்து வருகின்றன. இது குறித்த தனது பதிலை மார்க்சிஸ்ட் பத்திரிகை ஒன்றில் எழுதியுள்ள கேரள முதல்வர் பினராயி விஜயன், கொரோனா குறித்து மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த ஒரு பிரிவினர் முயற்சி செய்து வருகின்றனர் எனவும் இதுபோன்ற செயல்களால் கொரோனாவிற்கு எதிரான மக்களின் போராட்டம் திசை திரும்பும் நிலை ஏற்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே தமிழக-கேரள எல்லையில் கண்காணிப்பு தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. கேரளாவிலிருந்து கன்னியாகுமரிக்கு வரும் அனைத்து வாகனங்களையும் தமிழக பொலிஸார் சோதனை செய்கின்றனர். தடுப்பூசிச் சான்றிதழ் அல்லது கொரோனாப் பரிசோதனை நெகட்டிவ் சான்றிதழ் இருந்தால் மட்டுமே மாவட்டத்திற்குள் அனுமதிக்கின்றனர். உரிய சான்றிதழ் இல்லாமல் வருபவர்களை பொலிஸார் திருப்பி அனுப்புகின்றனர்.

மாவட்டத்தில் உள்ள மூன்று எல்லைப் பகுதிகளில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மலைப்பகுதியில் உள்ள எல்லைகளிலும் பொலிஸாரும் சுகாதாரத்துறையினரும் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

# வேளாண் சட்டங்களுக்கு எதிராகப் போராடிய தமிழக விவசாயிகள் மீதான வழக்குகள் வாபஸ்



சட்டப்பேரவையில் மத்திய அரசின் வேளாண் சட்டங்களுக்கு எதிரான தீர்மானத்தை மு.க.ஸ்டாலின் முன்மொழிந்தார்.

இதற்கு காங்கிரஸ், பா.ம.க, வி.சி.க, ம.தி.மு.க, தமிழ்நாடு வாழ்வுரிமைக் கட்சி, ம.ம.க. உள்ளிட்டவை ஆதரவளித்த நிலையில், அ.தி.மு.க, பா.ஜ.க. இரு கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்து அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தன.

வேளாண் சட்டங்களுக்கு எதிராகப் போராடிய தமிழக விவசாயிகள் மீதான வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்படுகின்றன எனவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார். வேல்முருகன், ஜவாஹிருல்லா ஆகியோரின் கோரிக்கையை ஏற்று இந்த முடிவை முதல்வர் அறிவித்துள்ளார்.

# அந்தமான், நிகோபார் தீவுகளில் கொரோனாத் தொற்று இல்லை



இந்தியாவில் கொரோனா வைரஸின் தாக்கம் சில பிராந்தியங்களில் மீண்டும் அதிகரிக்கத்தொடங்கியுள்ளது.

ஆனாலும், ஒருசில மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வைரஸ் பரவல் கணிசமாகக் குறைந்துள்ளது. அந்த வகையில், யூனியன் பிரதேசமான அந்தமான், நிகோபார் தீவுகளில் கொரோனாவின் இரண்டாவது அலை கட்டுக்குள் வந்துள்ளது.

அந்தமான், நிகோபார் தீவுகளில் தொடர்ந்து மூன்றாவது நாளாக நேற்றும் அங்கு யாருக்கும் கொரோனாத் தொற்று அடையாளம் காணப்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தமான் தீவுகளில் இதுவரை 7,560 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 129 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனாப் பாதிப்பிலிருந்து இதுவரை 7,429 பேர் குணமடைந்துள்ளனர்.

# சுதந்திரமாக செயல்பட அனுமதிக்காவிட்டால் சும்மாவிடேன் - பஞ்சாப் காங்கிரஸ் தலைவர் சித்து

பஞ்சாப்பில் முதல்வர் அம்ரீந்தர் சிங் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி நடந்துவருகிறது. கட்சியின் மாநிலத் தலைவரான முன்னாள் கிரிக்கெட் வீரர் நவ்ஜோத் சிங் சித்துவின் ஆலோசகர்கள் இருவர், காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் குறித்த சர்ச்சையான கருத்துக்களை வெளியிட்டனர்.

கட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் கருத்துகளைக் கூறியமையால் அவர்கள் இருவரையும் கட்சியிலிருந்து நீக்குமாறு பஞ்சாப் காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் ஹரிஷ் ராவத் வலியுறுத்தியுள்ளார்.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள சித்து, தன்னைச் சுதந்திரமாக முடிவெடுத்துச் செயல்பட அனுமதிக்குமாறும் இல்லையெனில் யாரையும் சும்மா விடப்போவதில்லை என்றும் கூறியுள்ளார். சம்பந்தப்பட்டவர்களை சித்து நீக்காவிட்டால் தாம் நீக்கப் போகிறேன் என ஹரிஷ் ராவத் கூறியுள்ளமையால் பஞ்சாப் காங்கிரசில் உட்கட்சி மோதல் வலுத்துள்ளமை வெளிப்படையாகியுள்ளது.



# மட்டக்களப்பில் டெல்டா மற்றும் அல்பா வைரஸ் தொற்றாளர்கள் கண்டுபிடிப்பு

மட்டக்களப்பில் டெல்டா மற்றும் அல்பா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் கடந்த 24 மணித்தியாலத்தில் கொரோனாவினால் 10 பேர் உயிரிழந்துள்ளமையையடுத்து 211 ஆக உயிரிழப்பு அதிகரித்துள்ளதுடன் 274 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா. மயூரன் தெரிவித்தார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா. மயூரன் இன்று சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேரும், களுவாஞ்சிக்குடி, ஏறாவூர், செங்கலடி, வெல்லாவெளி, வாழைச்சேனை, வவுணதீவு, ஆரையம்பதி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் தலா ஒருவர் வீதம் 7 பேர் உட்பட 10 பேர் கடந்த 24 மணித்தியாலத்தில் உயிரிழந்துள்ளமையையடுத்து மாவட்டத்தில் 211 பேராக அதிகரித்துள்ளது

மாவட்டத்தில் இருந்து எழுமாறாக எடுக்கப்பட்ட 3 பேரின் பி.சி.ஆர். பரிசோதனையின் மாதிரிகள் கொழும்பு ஜெயவர்தன பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது இதனையடுத்து இதில் இருவருக்கு டெல்டா வைரஸும். ஒருவருக்கு அல்பா வைரஸும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது

எனவே மாவட்டத்தில் டெல்டா வைரஸ் தொற்றுப் பரவியிருக்கின்றதுடன் ஒரு வாரத்தில் 1,982 கொரோனாத் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையுடன் நாளாந்தம் 300 தொற்றாளர்கள் கண்டறியப்படுவதுடன் 5 க்கு மேற்பட்டோர்



மரணமடைந்து வருகின்றனர். ஆகவே பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் அப்போது தான் தொற்றை கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



## சீனக்குடா பகுதியில் வீதி மின் விளக்குகள் பழுதுபார்க்கப்பட்டன

திருகோணமலை, சீனக்குடா பிரதேசத்தில் பல வருட காலமாக பொருத்தப்படாமலும் செயலிழந்தும் காணப்பட்ட வீதி மின் விளக்குகள் திருத்தப்பட்டு மீண்டும் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டன.

இப் பிரதேசத்தில் முக்கிய இடங்களில் வீதி மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை எனவும் சில இடங்களில் செயலிழந்து காணப்படுகின்றன எனவும் பொது மக்களும் சங்கங்களும் திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எல்.எம். முகம்மட் நௌபாரிடம் முறையிட்டு இருந்தனர்.

அதனை நேரில் சென்று பார்வையிட்டதுடன் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் மூலம் சீனக்குடா பிரதேசத்தில் பழுதடைந்துள்ள வீதி மின்விளக்குகள் திருத்தப்பட்டும் ஏனைய பகுதிகளில் புதிய மின் இணைப்புக்கள் வழங்கி மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டது.

இதன்போது எஞ்சிய வேலைகள் அடுத்த கட்டமாக தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளித்தார்.

## கொரோனா விழிப்புணர்வு பதாகைகள் இராணுவ அதிகாரிகளினால் திறப்பு



கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கல்முனை பகுதியில் பொதுமக்களுக்கு கொரோனாத் தொற்று நோய் தொடர்பில் விழிப்பூட்டும் வகையில் கல்முனை கொரோனா தடுப்புசெயலணியின் ஏற்பாட்டில் கொரோனாத் தொற்று பற்றிய அறிவுறுத்தல் அடங்கிய விழிப்புணர்வு பதாகைகள் நேற்று திறந்து வைக்கப்பட்டன. இவ்விழிப்புணர்வு பதாகைகள் கல்முனை முகைதீன் ஜும்மா பெரிய பள்ளிவாசல் முன்றலில் மற்றும் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் அருகாமையில் திறந்து வைக்கப்பட்டன.

இதன் போது கல்முனை அனைத்து பள்ளிவாசல்கள் மற்றும் பொது நிறுவனங்களின் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ.அஸீஸ் , கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ. ஆர். எம். அஸ்மி , கல்முனை அஷ்ரப் ஞபகார்த்த வைத்தியசாலை அத்தியட்சகர் ஏ. எல். எப். ரகுமான், 241வது இராணுவப்பிரிவின் கட்டளை அதிகாரி, கல்முனைப் பிராந்திய இராணுவ மேஜர் சாந்த விஜேயகோன், வைத்தியர்களான ஏ. எல். பாறுக், ஜெசிலுல் இலாஹி, கல்முனை தெற்கு மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ. எம். பாறுக், உட்பட கல்முனை கொரோனா தடுப்புசெயலணி உறுப்பினர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



## முள்ளிப்பொத்தானை வீதிகளை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை

திருகோணமலை மாவட்டத்தின் ஆயிலியடி – 4 ஆம் வாய்க்கால் – முள்ளிப்பொத்தானை வீதியினை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.தௌபீக்கின் ஏற்பாட்டில் சுமார் 7 கிலோ மீற்றர் வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

ஆயிலியடி –நான்காம் வாய்க்கால் மற்றும் முள்ளிப்பொத்தானை வீதியினை புனரமைப்பு செய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் அவர்களுடன் பொறியியலாளர் குழுவினர் நேற்று பார்வையிட்டு மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு, வீதி தொடர்பான மேலதிக தகவல்களையும் பொறியியலாளர் குழுவினர் கேட்டறிந்து கொண்டார்கள்.

ஆயிலியடி –நான்காம் வாய்க்கால் மற்றும் முள்ளிப்பொத்தானை வீதிகளை புனரமைப்பு செய்யும் பட்சத்தில் முள்ளிப்பொத்தானை கந்தளாய் மற்றும் வான்எல, கிண்ணியா மக்களின் போக்குவரத்து மிகவும் லேசாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.



## கல்முனையில் நடமாடும் தடுப்பூசி செலுத்தல் திட்டம்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ. சுகுணனின் நெறிப்படுத்தலில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் நடமாடும் தடுப்பூசி செலுத்தும் பணி இடம் பெற்று வருகின்றது.

இந்த வகையில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ. ஆர். எம். அஸ்மியின் வழிகாட்டலில் தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் கல்முனை பிரதேசத்தில் 60 வயதிற்கு மேற்பட்ட முதலாவது தடுப்பூசி இதுவரை பெறாத நபர்கள், தடுப்பூசி நிலையங்களுக்கு வந்து தடுப்பூசியினை பெற முடியாதவர்களுக்கான தடுப்பூசி வீடுகளுக்கு நேரடியாகச் சென்று செலுத்தும் நடவடிக்கை நேற்று இடம் பெற்றது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரிஅலுவலக அதிகாரிகள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், செயலணி பயிற்சியாளர்கள் என பலரும் கலந்துகொண்டு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# மீண்டும் மன்செஸ்டர் யுனைடெட்டில் கிறிஸ்டியானோ ரொனால்டோ



கால்பந்தாட்ட உலகின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ ஜுவண்டஸ் அணியில் இருந்து விலகி, 12 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மன்செஸ்டர் யுனைடெட் அணியில் இணைவது உறுதியாகியுள்ளது.

உலகமெங்கும் பல கோடி ரசிகர்களைக் கவர்ந்த போர்த்துக்கல்லின் போராட்ட குணம் மிக்க வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ.

தனது 18 ஆவது வயதில் தேசிய சீனியர் அணியில் தடம் பதித்திருந்தார். இவரை 2003 ஆம் ஆண்டு முதல் முறையாக சீனியர் கழக அணிகளில் மிகவும் பிரபலமான இங்கிலாந்தின் மன்செஸ்டர் யுனைடெட் ஒப்பந்தம் செய்து கொண்டது.

பதின்ம வயதுடைய வீரர்களிலேயே பெருந் தொகைக்கு ஒப்பந்தமானவர் என்ற பெருமையையும் பெற்றிருந்தார் ரொனால்டோ.

2009 ஆம் ஆண்டு வரை அந்தக் கழகத்துக்காக விளையாடிய கிறிஸ்டியானோ 292 போட்டிகளில் விளையாடி118கோல்களைஅடித்தார்.ரொனால்டோவின் திறமையைக் கண்ட பல கிளப்புகளும் அவரை ஒப்பந்தம் செய்ய போட்டி போட்ட நிலையில் ஸ்பெயினின் ரியல் மட்ரிட் கழகம் பெருந்தொகை கொடுத்து அவரை ஒப்பந்தம் செய்தது. மட்ரிட் கழகத்திற்காக 451 கோல்கள் அடித்துள்ள ரொனால்டோ, அந்தக் கழகத்தின் வரலாற்றிலேயே அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற சாதனையும் படைத்துள்ளார்.

மட்ரிட் அணியில் விளையாடிய காலகட்டத்தில் 4 முறை கால்பந்து உலகின் உயரிய விருதான பலொன் டிஓர் விருதையும் வென்றிருக்கிறார்.

பின்னர் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் 4 ஆண்டுகள் ஒப்பந்தத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு இத்தாலியின் ஜுவண்டஸ் கழகத்தில் இணைந்தார் ரொனால்டோ. ஜுவண்டஸ் அணிக்காக விளையாடிய வீரர்களிலே அதிகவேகமாக 100 கோல்களை அடித்தவர் என்ற சாதனையும் அங்கு நிகழ்த்தினார்.

இந்த நிலையில் கிட்டத்தட்ட 12 ஆண்டுகளுக்குப் பிறகு பிறீமியர் லீக் போட்டிகளில் தனிச்சிறப்புக் கொண்ட தனது தாய்க் கழகமான மன்செஸ்டர் யுனைடெட்டில் இணைகிறார் ரொனால்டோ.




# தெற்காசிய கால்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடர் இலங்கை உத்தேசத் தெரிவு அணி அறிவிப்பு

தெற்காசிய கால்பந்து சம்மேளன (SAFF) சம்பியன்ஷிப் தொடருக்கான இலங்கை அணியின் உத்தேச முதல்கட்ட வீரர்கள் குழாம் தனது பயிற்சிகளை ஆரம்பித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. தெற்காசிய கால்பந்து சம்மேளன (SAFF) சம்பியன்ஷிப் தொடர் மாலைதீவுகளின் மாலே நகரில் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் நடை பெறவுள்ளது.

இதற்காகத் தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் அனைவரும் 72 மணிநேர இடைவெளியில் இரண்டு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டதன் பின்னர், களனியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இலங்கைக்கால்பந்துசம்மேளனத்தின்விளையாட்டுத் தொகுதியில் நேற்று தமது பயிற்சிகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த பி.சி.ஆர். பரிசோதனைகளின்போது 3 வீரர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு, அவர்கள் தனியார் வைத்திய சாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர்கள் நல்ல உடல் நலத்துடன் இருக்கின்றனர் எனவும் இலங்கைக் கால்பந்தாட்ட சம்மேளனம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே உலகக் கிண்ணத் தகுதிகாண் போட்டிகளுக்கான இலங்கைக் குழாமில் இருந்த வீரர்களுடன் இன்னும் சில வீரர்களும் இந்த உத்தேசப் பயிற்சி அணிக்குள் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே தேசிய அணியில் விளையாடிய அனுபவம் கொண்ட வீரர்களான அசேல மதுஷான், அஃபீல் மொஹமட், அமான் பைசர் ஆகிய வீரர்கள் மீண்டும் இந்தப் பயிற்சிக் குழாமில் இணைக்கப்பட்டுள்ளனர். உலகக் கிண்ணத் தகுதிகாண் போட்டிகளுக்கான குழாமில் இணைக்கப்பட்டு பின்னர் காயத்துக்குள்ளாகி விலகியிருந்த கொழும்பு கால்பந்து கழகத்தின் இளம் வீரர் அப்துல் பாசித்துக்கும் மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், அப் கன்ட்ரி லயன்ஸ் வீரர் மொஹமட் சிபானும் இடம்பெற்றுள்ளார்.

அதேபோன்று, கோல் காப்பாளர்களாக குழாமில் இருந்த சுஜான் பெரேரா, ருவன் அருனசிறி மற்றும் தனுஷ்க ராஜபக்ஷ ஆகியோருக்கு மேலதிகமாக புளூ ஸ்டார் அணியின் கோல் காப்பாளர் கவீஷ் பெர்னாண்டோ மற்றும் டிபெண்டர்ஸ் அணியின் இளம் கோல் காப்பாளர் நுவன் கிம்ஹான ஆகியோரும் புதிதாக கோல் காப்பாளர்களாக அணியில் இணைக்கப்பட்டுள்ளனர். இதில், நுவன் கிம்ஹான உலகக் கிண்ண தகுதிகாண் தொடருக்கான ஆரம்ப கட்ட குழாத்தில் இடம்பெற்றிருந்தபோதிலும் இறுதி வீரர்கள் பட்டியலில் அவருக்கு இடம் கிடைத்திருக்கவில்லை.

இங்கிலாந்து கழகங்களுக்காக விளையாடிவரும் வீரர்களான மார்வின் ஹமில்டன் மற்றும் டிலன் டி சில்வா இருவரது பெயரும் இந்த உத்தேசப் பயிற்சி அணியில் இடம்பெற்றுள்ள போதிலும், FIFA விதிகளுக்கு அமைய இவர்கள் SAFF சம்பியன்ஷிப் தொடர் ஆரம்பமாவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே இலங்கை அணியுடன் இணைந்து கொள்வார்கள் என்று இலங்கை கால்பந்து சம்மேளனம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இசுரு உதான அபாரப் பந்துவீச்சு ட்ரின்பாகோ அணிக்கு வெற்றி

கரீபியன் பிறீமீயர் லீக் (சி.பி.எல்.) ரி-20 தொடரில் நேற்று நடைபெற்ற குழு நிலைப் போட்டியொன்றில் ட்ரின்பாகோ நைட்ரைடர்ஸ் மற்றும் பார்படோஸ் ரோயல்ஸ் அணிகள் ஒன்றையொன்று எதிர்கொண்டிருந்தன.

இந்தப் போட்டியில் ட்ரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடியிருந்த இசுரு உதான 4 ஓவர்களில் 21 ஓட்டங்களைக்கொடுத்து 5 விக்கெட்டுக்களை சாய்த்து, ரி-20 போட்டிகளில் தன்னுடைய சிறந்த பந்துவீச்சு பெறுதியைப் பதிவுசெய்திருக்கிறார்.



இசுரு உதானவின் அபாரப் பந்துவீச்சினால் ஆடிய பார்படோஸ் கிங்ஸ் அணி 19.2 ஓவர்களில் 122 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பதிலளித்து விளையாடிய ட்ரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணி, 16.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மட்டும் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இந்தப் போட்டியில் ட்ரின்பாகோ நைட்ரைடர்ஸ் அணியின் வெற்றியினை உறுதி செய்த இசுரு உதான ஆட்டநாயகனாகவும் தெரிவாகியிருந்தார். இலங்கை தேசிய கிரிக்கெட் அணியிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்ற இசுரு உதான, தற்போது உள்ளூர் மற்றும் சர்வதேச கழக மட்டப் போட்டிகளில் தொடர்ந்தும் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# ஐ.பி.எல். தொடரில் விளையாடுவதற்கு டிம் சௌதி, அடில் ரஷீட் ஒப்பந்தம்

ஐ.பி.எல். 2021 தொடரில் மீதமுள்ள ஆட்டங்களில் விளையாட கொல்கத்தா நைட்ரைடாஸ் அணியில் நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் டிம் சௌதியும், பஞ்சாப் கிங்ஸ் அணியில் இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் அடில் ரஷீட்டும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஐ.பி.எல். 2021 சீசன் கொரோனாத் தொற்றின் பாதிப்பு காரணமாக பாதியிலேயே ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில், இந்த தொடரின் விடுபட்ட போட்டிகள் வரும் செப்டெம்பர் 19 இல் தொடங்கி ஒக்டோபர் 15 வரை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற உள்ளன.

இதற்கிடையில் அணிகளில் இடம்பெற்றிருந்த வெளிநாட்டு வீரர்கள் பல்வேறு காரணங்களுக்காக விலகிவருகின்றனர்.

ரி-20 உலகக் கிண்ணத் தொடர், காயம், மனநலன், கொரோனா அழுத்தங்கள் என்று இதற்காகப் பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறு விலகும் வீரர்களுக்கான மாற்று வீரர்களை ஒப்பந்தம் செய்வதில் அணி முகாமைகள் தீவிரம் காட்டிவருகின்றன.

அந்த வகையில், கொல்கத்தா நைட்ரைடாஸ் அணியிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக விலகிய ஆஸ்திரேலிய வீரர் பட் கம்மின்ஸ்க்கு பதிலாக நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளார் டிம் சௌதியும், பஞ்சாப் அணியிலிருந்து விலகிக்கொண்டுள்ள கைரிச்சாட்ஸனுக்குப் பதிலாக இங்கிலாந்து சுழல்பந்து வீச்சாளார் அடில் ரஷீட்டும் சோக்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இலங்கைக்கான சீனத் தூதருக்கும் சபாநாயகருக்கும் இடையில் சந்திப்பு

இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷீ சென்ஹொங், மரியாதையின் நிமித்தம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டுக்கு, முழுமையான ஒத்துழைப்பை இலங்கை அரசாங்கத்துக்கு சீன அரசாங்கம் தொடர்ந்து வழங்கும் என சீனத் தூதுவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

மேலும், இரு நாடுகளுக்குமிடையில் பொருளாதாரம், நிதி ஒத்துழைப்பு மற்றும் நாடாளுமன்ற நட்புறவைப் பலப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையின் நீண்டகால நட்பு நாடு என்ற ரீதியில் சீன அரசாங்கம் தொடர்ச்சியாக வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு சபாநாயகர் தனதுநன்றியைத்தெரிவித்துள்ளார்.

## இலங்கைத் தமிழர் விவகாரம்;

# தமிழக முதலமைச்சருக்கு செல்வம் நன்றி பாராட்டு!

இலங்கைத் தமிழர்களுக்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்த நடவடிக்கைக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் அகதிமுகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் நலன்கருதி பல்வேறு நலத்திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவருக்கு நன்றி தெரிவித்து அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்ப்பாண மக்களை பாராட்டும் பொலிஸார்

கொவிட் வைரஸ் தீவிரம் அடைந்துள்ள நிலையில் நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் வட மாகாணத்தின் பிரதான நகரமான யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மிகவும் சரியான முறையில் பின்பற்றுகின்றனர் என யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்ட நாள் முதல் இதுவரையில் யாழ்ப்பாண நகரம் வெறிச்சோடிக் காணப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பிரதான வீதிகளில் மாடுகள் மற்றும் நாய்களை மாத்திரமே காண முடிவதாகவும் மக்கள் பொறுப்புகளை உணர்ந்து செயற்படுகின்றனர் எனவும் யாழ்ப்பாண பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறும் நபர்களை கைது செய்வதற்காக பல இடங்களில் வீதித்தடைகள் அமைக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

# மக்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளாவிட்டால் முடக்கம் பயனளிக்காது என்கின்றார் சுதர்ஷினி

மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறினால் முடக்க கட்டுப்பாடுகள் பயனுள்ளதாக அமையா என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண் டோபுள்ளே தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று அதிகரிப்பைத் தடுக்க நாட்டை முடக்குவது ஒரு தீர்வு அல்ல எனக் குறிப்பிட்ட அவர், இந்த முயற்சியில் மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது என்றும் கூறினார்.

ஆகவே முகக்கவசம், சமூக இடைவெளி மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களுக்கு செல்வதைத் தவிர்ப்பது போன்ற நடைமுறைகளை மக்கள் பின்பற்றாவிட்டால் முடக்க கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டும் பயனில்லாமல் போகும் எனத் தெரிவித்தார். எனவே மக்கள் பொறுப்புடன் நடந்துகொண்டால் கொரோனாத் தொற்று பரவுவதைத் தடுக்க முடியும் என்றும் மக்களின் ஒத்துழைப்பு இதில் முக்கியமானது என்றும் அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கூறினார்.

இதேவேளை வெளிநாட்டில் உள்ளவர்களின் ஆதரவு அவசியம் எனக் குறிப்பிட்ட சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, முடியுமானால் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு பங்களிப்பைச் செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

# ஆட்சியைக் கவிழ்ப்பதே எதிரணியினரின் இலக்கு!

# கர்மவினை இவர்களை விடாது அடுத்த பிறவியில் பாடம் படிப்பர்

## அமைச்சர் ரோஹித குற்றச்சாட்டு

கொவிட் வைரஸ் என்ற சர்வதேச தொற்று நெருக்கடி நிலைமைக்கு மத்தியிலும் நாட்டில் ஸ்தீரமற்ற தன்மையை ஏற்படுத்தி, ஆட்சியைக் கவிழ்ப்பதை இலக்காகக் கொண்டே எதிர்க்கட்சிகள் செயற்படுகின்றன. இதற்காகவே நாட்டைத் தொடர்ந்து மேலும் இரண்டு வாரங்களுக்கு முடக்குமாறு எதிரணியினர் வலியுறுத்தி வருகின்றனர் என அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு -

சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றி கொவிட்டுக்கு மத்தியிலும் வாழநேரும் நிலைமையே உருவாகும். எனவே, வைரஸ் தொற்றை ஒழிக்கும் செயலை முன்னெடுக்கும் அதேவேளை பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தையும் ஆரம்பிக்க வேண்டும்.

இதன்படி சுகாதார நடைமுறைகளுக்கமைய சுற்றுலாத்துறையை செயற்படுத்த வேண்டும். கைத்தொழில் துறைகள் மற்றும் தொழிற்சாலைகள் செயற்பட வேண்டும். நாடு முடக்கப்பட்டிருந்தாலும் அரச ஊழியர்களின் சம்பளம் துளியளவும் குறைக்கப்படவில்லை. நெருக்கடி நிலைமையிலும் முழு சம்பளம் வழங்கப்பட்டது.

ஆனால், பயணக்கட்டுப்பாட்டால் நாளாந்த வருமானத்தை நம்பி வாழ்பவர்களுக்குதான் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, அவர்கள் தொடர்பிலும் சிந்தித்து நாம் விழிப்பாக செயற்பட வேண்டும். நாட்டை முடக்குமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. நாடும் முடக்கப்பட்டுள்ளது.

ஆனால், இன்று என்ன சொல்கின்றனர், பகுதியளவே நாடு மூடப்பட்டுள்ளது, எனவே, முழுமையாக மேலும் இரண்டு வாரங்கள் முடக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

தொழிற்சாலைகளை மூடுமாறு அழுத்தம் கொடுக்கின்றனர். தொழிற்சாலைகள் இயங்காது, ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தால் இந்நாட்டுக்கான அந்நிய செலாவணி கிடைக்காது. நாட்டுக்கு வருமானம் இல்லாமல் போனால் டொலர் இருக்காது. அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் எரிபொருள் மற்றும் மருந்து வகைகளை வாங்க முடியாது.

எனவே, இவ்வாறானதொரு நிலைமையை ஏற்படுத்தி, அரசை வீட்டுக்கு அனுப்பும் குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரலே தற் போதைய நெருக்கடியான சூழ்நிலையிலும் முன்னெடுக்கப்படுகின்றது.

நாடு ஸ்தீரமற்ற நிலையில் இருக்க வேண்டும் என்பதைத்தான் இத்தகையவர்கள் விரும்புகின்றனர். கர்மவினை என்பது இவர்களை சும்மா விடாது. அடுத்த பிறவியிலாவது அவர்களுக்கு தகுந்த பாடம் கிடைக்கும் - என்றார்.

# பொலிஸ் மா அதிபரின் காணொலி கண்காட்சியாகக்கூட இருக்கலாம்!

## கபீர் ஹாசீம் குற்றச்சாட்டு

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் விசாரணை தொடர்பில் பொலிஸ்மா அதிபர் விடுத்துள்ள அறிவிப்பு ஊடகத்துக்கான கண்காட்சியாகக்கூட இருக்கலாம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சாடியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதலுடன் தொடர்புடைய 311 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒரு லட்சம் தொலைபேசி உரையாடல்கள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

36 கோடி 50 லட்சம் ரூபா பணம் மற்றும் சொத்துக்கள் இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. - என்று பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன தெரிவித்திருந்தார்.

இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்பாகப் பொலிஸ்மா அதிபர் விசேட காணொலி அறிவிப்பிலேயே மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் ஊடகங்களிடம் கூறியவை வருமாறு -

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும், தாக்குதலின் பின்புலம் மற்றும் பிரதான சூத்திரதாரிகள் கண்டறியப்பட வேண்டும் என்று நாடாளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் பிரதான எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் நாம் குரல் எழுப்பினோம். பேராயர் உள்ளிட்ட தரப்பினரும் இதனை வலியுறுத்தினர்.

தாக்குதல் நடைபெற்று ஒன்றரை வருடங்களுக்குப் பின்னரே பொலிஸ்மா அதிபர் ஒருவர் வெளியில் வந்து அது தொடர்பில் கருத்து வெளியிடுகின்றார்.

கறுப்புக்கொடிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு கடும் எதிர்ப்புகள் வெளிக்கிளம்பியுள்ள பின்புலத்திலேயே இந்த அறிவிப்பும் பொலிஸ்மா அதிபரால் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, இது கண்காட்சியாகக்கூட இருக்கலாம். ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் குற்றவாளிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதியின் சௌபாக்கிய வேலைத்திட்டத்தில் உறுதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரசு செயற்படாதமை ஏன்? - என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

# ஆற்றைக் கடக்க முற்பட்டபோது தவறி வீழ்ந்து விவசாயி மரணம்

மட்டக்களப்பு சந்திவெளியையும் திகிலிவெட்டையையும் இணைக்கும் ஆற்றைப் பாதையின் ஊடாக கடந்து வயலுக்குச் சென்று வீடு திரும்பியபோது பாதையிலிருந்து தவறி ஆற்றில் வீழ்ந்து விவசாயி ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளார். சித்தாண்டி 2ஆம் பிரிவைச் சேர்ந்த 45 வயதுடைய பாக்கியராசா மகேந்திரன் என்பவரே இவ்வாறுஉயிரிழந்தநிலையில்கடந்தவெள்ளிக்கிழமை பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேற்படி நபர் வழமைபோல ஆற்றைச் சந்தி வெளியிலுள்ள பாதையின் ஊடாக கடந்து திகிலிவெட்டை பிரதேசத்திலுள்ள வயலுக்கு வெள்ளி காலை சென்றுள்ளார்.

பின் அங்கிருந்து சுமார் 4 மணிக்கு மேற்படி பாதையூடாக வீட்டிற்குச் செல்வதற்காகக் கடந்தபோது வலிப்பு ஏற்பட்டதையடுத்து பாதையிலிருந்து தவறி ஆற்றில் வீழ்ந்துள்ளார். இவ்வாறு வீழ்ந்து நீரில் மூழ்கி அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. அவரது சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.08.2021இல் வெளியிடப்பெற்றது.